# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 89 — 1973 දෙසැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.12.07

89 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1321 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 1326 | ஏலவிற்பனைகள் | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | 1327 | நானாவித அறிவித்தல்கள் | — |


*கவனிக்க.*—பொலிஸ் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**பொலிஸ் திணைக்களம்**

கீழ்க்காணும் இடங்களில், சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென மறித்துவைக்கப்பட்டிருப்பேருக்கு 1.1.1974 தொடக்கம் 31.12.1974 வரையும் சமையல் செய்த உணவு வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமைக்காரியாலய கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) கொம்பனித்தெருவிலுள்ள பொலிஸ் தடுப்புக்காவல் நிலையமும்,

(ஆ) தலைமன்னாரிலுள்ள பொலிஸ் தடுப்புக்காவல் நிலையமும், தொற்றுநோய் பரவாத்தடை நிலையமும்.

2. கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் அலுவலகங்களில் முறையே பெற்றுக்கொள்ளலாம்.

(அ) பொலிஸ் அதிகாரி, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1.

(ஆ) பொலிஸ் அதிகாரி, பொலிஸ் காரியாலயம், வவுனியா.

கேள்விக்கட்டணமாக ரூபா 25/- மேற்கூறிய பொலிஸ் அதிகாரிகளின் அலுவலகங்களில் அல்லது கொழும்புக்கும், வவுனியாவுக்கும் வெளியேயுள்ள ஏதாவது ஒரு கச்சேரியில் செலுத்திய பற்றுச்சீட்டைக் காட்டி 1973 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை ந. ப. 12.00 மணிவரையும் கேள்விப்பத்திரப் படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் (இரண்டு பிரதிகளாக) இவ்விரு காரியாலயங்களில் பெற்று கேள்விப்பத்திரப்படிவங்களில் 1973 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்குமுன் கொழும்பில் உள்ள பொலிஸ் அதிபரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரச்சபைத் தலைவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விப்பத்திரங்கள் இப்பந்தியிற் கூறப்பட்ட நேரத்திற்கும் திகதிக்கும் முன் அக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

4. 1973 ம் ஆண்டு மார்கழி மாதம் 26 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை மேற்குறிப்பிட்ட திணைக்களத்தில் திறக்கும்பொழுது கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

5. மேலதிக விபரங்களைக் கொழும்பு பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்திலிருந்தும், வவுனியா பொலிஸ் அதிகாரியினது அலுவலகத்திலிருந்தும் முறையே பெற்றுக்கொள்ளலாம்.

பொலிஸ் அதிபர்.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1,
27 ம் திகதி கார்த்திகை 1973.

12-81—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89.

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியாசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

### நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு (பிரதேசப் பிரிவு)

கட்டும் பலகைகள் விநியோகத்திற்கான கேள்விகள்—1974

பெட்டிகள் தயாரிப்பதற்கு ஏற்றதான 1", ½" பலகைகளை விநியோகிப்பதற்கு கேள்விகளை 1973 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணி வரையும் இலங்கையர்களிடமிருந்தும், இலங்கையர்களைக் கொண்ட வியாபார நிறுவனங்களிடமிருந்தும் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின் (பிரதேசப் பிரிவு) கேள்விச் சபைத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

2. இவ்வமைச்சலுவலகத்தில் அல்லது இவ்வமைச்சின் பிரதேச அலுவலகத்தில் ரூபா 50/- கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து, 1973 டிசம்பர் மாதம் 27 ந் திகதி (வியாழக்கிழமை) பி. ப. 2.00 மணி வரைக்கும் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள அலுவலகத்திலிருந்து பெறத்தக்க படிவங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

3. மேலும் தகவல்கள் தேவைப்படின் அவற்றை கொழும்பு 1 ல் உள்ள பழைய செயலகக் கட்டிடத்திலுள்ள நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சில் (3 ம் மாடி அறை 356) பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. சீ. பி. த. எஸ். விக்கிரமநாயக,
காரியதரிசிக்காக.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ம் திகதி.

12-83—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### வளி மண்டல ஆய்வுப்பகுதி

ஜல வாயு தயாரிப்பதற்கு வேண்டிய அலுமினியச் சீவல் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரம்

வளி மண்டல ஆய்வுப்பகுதிக்கு 40 அந்தர் அலுமினியச் சீவல் தேவைப்படுகிறது. இது கடைசல் சீவல்கள், வெட்டித் தள்ளிய சிறு துண்டுகள், மெல்லிய தகடுகள் ஆகியன கொண்டதால், தகரக் கொல்லர் கத்திரிக்கோலால் வெட்டக்கூடியனவான மெல்லிய கீற்றுக்களாக இருக்கவேண்டும். மெல்லிய தகடுகளாகக் கொடுப்பதானல் கடதாசியும் மையும் மற்றும் பிற பொருட்களும் நீக்கியே கொடுக்கப்படல் வேண்டும்.

1974 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 5 ஆந் திகதியளவில் தேவைப்படுகிறது.

இப்பொருளைக் கொடுப்பதற்காக உத்தேசிப்போர் மாதிரிகளுடன் தங்கள் கேள்விப்பத்திரங்களை உறையிலிட்டு அரக்குமெழுகூற்றி முத்திரையிட்டு கீழ்கையொப்பமிட்டு இருப்பவருக்கு 1974 ஆம் ஆண்டு ஜனவரி 5 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் சேரத்தக்கதாக அனுப்பவேண்டும்.

கேள்விப்பத்திரங்களில் குறிப்பிடும் விலை ஒரு அந்தருக்கானதும் சரக்குகளிவிட்டு இக் கந்தோருக்கு சேர்ப்பிக்கப்படலாய் இருக்க வேண்டும்.

அதிபர்.

வளிமண்டல ஆய்வுப்பகுதி,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7, 23.11.1973.

12-93—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89.

---

### தேசிய வீடமைப்புத் திணைக்களம்

பழைய கட்டடத்தை அழித்தலும், பொருட்களையும் கழிவுப் பொருட்களையும் அகற்றுதலும்

கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலிருக்கும் இடத்திலிருந்து கிட்டத்தட்ட 813 சதுர அடியுள்ள ஒரு பழைய கட்டடத்தை அழிப்பதற்கும், பொருட்களையும், கழிவுப்பொருள்களையும் அகற்றுவதற்கும் தேசிய வீடமைப்பு ஆணையாளரால் 1973.12.14 ம் தேதி காலை 10 மணி வரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எதிர்கால நோக்குள்ள கேள்விக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கூடிய விலை பேசுபவருக்குக் கேள்வி அளிக்கப்படும். அந்தக் கட்டடத்தைப் பற்றிய மேலதிக விபரங்கள் கொழும்பு 2, தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் உள்ள களஞ்சியக் கிளையிலிருந்து அலுவலக நேரங்களிற் பெற்றுக் கொள்ள முடியும்.

ஐ. ஏ. சீ. பெர்னாண்டோ,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்பு திணைக்களம்,
சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை,
கொழும்பு 2,
1973, நவம்பர், 26.

12-77—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

எம்பிலிப்பிட்டியாவிலுள்ள கடதாசி ஆலைக்கு சகல சேவைகளும் உட்பட வீடுகளை நிர்மாணிப்பதற்குக் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தபானத்தின் தலைவர் அவர்களால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு-2, டபிள்யூ. ஏ. டீ. இராமநாயக்கா மாவத்தை, 120 ம் இலக்கத்திலுள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நிர்மாண கைத்தொழில் ஆலோசனைச் சேவைகள் குழுவின் முகாமையாளரின் காரியாலயத்தில் 1973 நவம்பர் 26 ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் டிசம்பர் 15 ந் திகதி சனிக்கிழமை வரை கேள்விப்பத்திர தஸ்தாவேஜுகள் வழங்கப்படும். மீளளிக்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 250/- ம் உடன் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக இரு ஆரம்பப் பிரதிகளுக்கு ரூபா 200/- ம் கோரிக்கை தஸ்தாவேஜுவின் ஒவ்வொரு மேலதிகப் பிரதிக்காக மீளளிக்கப்படாத தொகையாக ரூபா 50/- ம் செலுத்தி இந்தக் கேள்விப்பத்திர தஸ்தாவேஜுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1974 சனவரி 2 ம் திகதி புதன் கிழமை மு. ப. 10.00 மணிக்கு கொழும்பு-2, யூனியன் பிளேஸ், 356 ம் இலக்கத்திலுள்ள, கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அவர்களின் காரியாலயத்தில் மூடப்படும்.

பதிவு செய்யப்பட்ட அரசாங்க அல்லது கூட்டுத்தாபன கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்குத்தான் கேள்விப்பத்திரங்கள் கட்டுப்படுத்தப்படும். இவ்வொப்பந்தக்காரர்கள் தாங்கள் கடந்த 5 வருட காலத்திற்குள் ரூபா 12,50,000 ற்கு மேல் பெறுமதியுள்ள கட்டிடங்களைப் பொறுப்பேற்று பூர்த்தி செய்துள்ளார்கள் என்பதை நிரூபித்துக் காண்பிக்க வேண்டும்.

இது சம்பந்தமான மேலும் விபரங்களுக்கு, கொழும்பு-2, டபிள்யூ. ஏ. டி. இராமநாயக்கா மாவத்தை, 120 ம் இலக்கத்திலுள்ள இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நிர்மாண, கைத்தொழில் ஆலோசனைச் சேவைக் குழுவின் முகாமையாளருக்கு விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக்
கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2,
1973.11.28.

12-126—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு (பிரதேசப் பிரிவு)

*கட்டும் பலகைகள் விநியோகத்திற்கான கேள்விகள்—1974*

பெட்டிகள் தயாரிப்பதற்கு ஏற்றதான 1", ½" பலகைகளை விநியோகிப்பதற்கு கேள்விகளை 1973 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணி வரையும் இலங்கையர்களிடமிருந்தும், இலங்கையர்களைக் கொண்ட வியாபார நிறுவனங்களிடமிருந்தும் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின் (பிரதேசப் பிரிவு) கேள்விச் சபைத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

2. இவ்வமைச்சலுவலகத்தில் அல்லது இவ்வமைச்சின் பிரதேச அலுவலகத்தில் ரூபா 50/- கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து, 1973 டிசம்பர் மாதம் 27 ந் திகதி (வியாழக்கிழமை) பி. ப. 2.00 மணி வரைக்கும் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள அலுவலகத்திலிருந்து பெறத்தக்க படிவங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

3. மேலும் தகவல்கள் தேவைப்படின் அவற்றை கொழும்பு 1 ல் உள்ள பழைய செயலகக் கட்டிடத்திலுள்ள நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சில் (3 ம் மாடி அறை 356) பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. சீ. பி. த. எஸ். விக்கிரமநாயக,
காரியதரிசிக்காக.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ம் திகதி.

12-83—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### வளி மண்டல ஆய்வுப்பகுதி

ஜல வாயு தயாரிப்பதற்கு வேண்டிய அலுமினியச் சீவல் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரம்

வளி மண்டல ஆய்வுப்பகுதிக்கு 40 அந்தர் அலுமினியச் சீவல் தேவைப்படுகிறது. இது கடைசல் சீவல்கள், வெட்டித் தள்ளிய சிறு துண்டுகள், மெல்லிய தகடுகள் ஆகியன கொண்டதால், தகரக் கொல்லர் கத்திரிக்கோலால் வெட்டக்கூடியனவான மெல்லிய கீற்றுக்களாக இருக்கவேண்டும். மெல்லிய தகடுகளாகக் கொடுப்பதானல் கடதாசியும் மையும் மற்றும் பிற பொருட்களும் நீக்கியே கொடுக்கப்படல் வேண்டும்.

1974 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 5 ஆந் திகதியளவில் தேவைப்படுகிறது.

இப்பொருளைக் கொடுப்பதற்காக உத்தேசிப்போர் மாதிரிகளுடன் தங்கள் கேள்விப்பத்திரங்களை உறையிலிட்டு அரக்குமெழுகூற்றி முத்திரையிட்டு கீழ்கையொப்பமிட்டு இருப்பவருக்கு 1974 ஆம் ஆண்டு ஜனவரி 5 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் சேரத்தக்கதாக அனுப்பவேண்டும்.

கேள்விப்பத்திரங்களில் குறிப்பிடும் விலை ஒரு அந்தருக்கானதும் சரக்குகளிலிட்டு இக் கந்தோருக்கு சேர்ப்பிக்கப்படலாய் இருக்க வேண்டும்.

அதிபர்.

வளிமண்டல ஆய்வுப்பகுதி,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7, 23.11.1973.

12-93—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89.

---

### தேசிய வீடமைப்புத் திணைக்களம்

பழைய கட்டடத்தை அழித்தலும், பொருட்களையும் கழிவுப் பொருட்களையும் அகற்றுதலும்

கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலிருக்கும் இடத்திலிருந்து கிட்டத்தட்ட 813 சதுர அடியுள்ள ஒரு பழைய கட்டடத்தை அழிப்பதற்கும், பொருட்களையும், கழிவுப்பொருள்களையும் அகற்றுவதற்கும் தேசிய வீடமைப்பு ஆணையாளரால் 1973.12.14 ம் தேதி காலை 10 மணி வரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எதிர்கால நோக்குள்ள கேள்விக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கூடிய விலை பேசுபவருக்குக் கேள்வி அளிக்கப்படும். அந்தக் கட்டடத்தைப் பற்றிய மேலதிக விபரங்கள் கொழும்பு 2, தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் உள்ள களஞ்சியக் கிளையிலிருந்து அலுவலக நேரங்களிற் பெற்றுக் கொள்ள முடியும்.

ஐ. ஏ. சீ. பெர்னாண்டோ,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்பு திணைக்களம்,
சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை,
கொழும்பு 2,
1973, நவம்பர், 26.

12-77—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

எம்பிலிப்பிட்டியாவிலுள்ள கடதாசி ஆலைக்கு சகல சேவைகளும் உட்பட வீடுகளை நிர்மாணிப்பதற்குக் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தபானத்தின் தலைவர் அவர்களால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு-2, டபிள்யூ. ஏ. டீ. இராமநாயக்கா மாவத்தை, 120 ம் இலக்கத்திலுள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நிர்மாண கைத்தொழில் ஆலோசனைச் சேவைகள் குழுவின் முகாமையாளரின் காரியாலயத்தில் 1973 நவம்பர் 26 ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் டிசம்பர் 15 ந் திகதி சனிக்கிழமை வரை கேள்விப் பத்திர தஸ்தாவேஜுகள் வழங்கப்படும். மீளளிக்கப்படும் கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 250/- ம் உடன் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக இரு ஆரம்பப் பிரதிகளுக்கு ரூபா 200/- ம் கோரிக்கை தஸ்தாவேஜுவின் ஒவ்வொரு மேலதிகப் பிரதிக்காக மீளளிக்கப்படாத தொகையாக ரூபா 50/- ம் செலுத்தி இந்தக் கேள்விப்பத்திர தஸ்தாவேஜுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1974 சனவரி 2 ம் திகதி புதன் கிழமை மு. ப. 10.00 மணிக்கு கொழும்பு-2, யூனியன் பிளேஸ், 356 ம் இலக்கத்திலுள்ள, கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அவர்களின் காரியாலயத்தில் மூடப்படும்.

பதிவு செய்யப்பட்ட அரசாங்க அல்லது கூட்டுத்தாபன கட்டிடஒப்பந்தக்காரர்களுக்குத்தான் கேள்விப்பத்திரங்கள் கட்டுப்படுத்தப்படும். இவ்வொப்பந்தக்காரர்கள் தாங்கள் கடந்த 5 வருடகாலத்திற்குள் ரூபா 12,50,000 ற்கு மேல் பெறுமதியுள்ள கட்டிடங்களைப் பொறுப்பேற்று பூர்த்தி செய்துள்ளார்கள் என்பதை நிரூபித்துக் காண்பிக்க வேண்டும்.

இது சம்பந்தமான மேலும் விபரங்களுக்கு, கொழும்பு-2, டபிள்யூ. ஏ. டி. இராமநாயக்கா மாவத்தை, 120 ம் இலக்கத்திலுள்ள இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நிர்மாண, கைத்தொழில் ஆலோசனைச் சேவைக் குழுவின் முகாமையாளருக்கு விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக்
கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2,
1973.11.28.

12-126—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### ஆயுள்வேதத் திணைக்களம்

பச்சை மூலிகைகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்
ஆயுள்வேத ஆரோக்கியசாலை இரத்தினபுரி, அனுராதபுரம்
ஆயுள்வேத ஆராய்ச்சி ஸ்தாபனம், நாவின்ன

1974 ம் ஆண்டு தை மாதம் 1 ந் திகதி முதல் 1974 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதிக் (இரு திகதிகள் உட்பட) காலத்திற்கு மேற்கூறிய ஸ்தாபனங்களுக்கு பச்சை மூலிகைகள் விநியோகிப்பதற்காக 1973 ம் ஆண்டு மார்கழி 12 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை தலைவர், கேள்விப்பத்திரச்சபை, ஆயுள்வேதத் திணைக்களம், கொட்டா ரோட், கொழும்பு 8, என்ற விலாசத்தில் தனித் தனியாக முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இலங்கையரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 50 ரூபா கட்டுப் பணத்தை ஆயுள்வேத ஆணையாளர் என்ற பெயரில் கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியிலோ செலுத்திப் பெறும் ரசீதைக் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படு முன்னர் கொண்டு வருதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 26.12.73 ந. ப. 12 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். தபால் மூலம் கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் பணம் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டை முன்கூட்டியே அனுப்பினால் கேள்விப்பத்திரங்களைப் பெற்று கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னதாக அனுப்புவதற்கு ஏற்றதாயிருக்கும்.

3. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியில் பதிவுத் தபால் மூலம் கேள்விச்சபைத் தலைவர், ஆயுள்வேத திணைக்களம், 325, கொட்டா ரோட், கொழும்பு 8 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் பக்க இடது மூலையில் "மூலிகைகள் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்—ஆயுள்வேத ஆரோக்கியசாலை/ஆராய்ச்சி ஸ்தாபனம் ........................." என்று தெளிவாகக் குறிப்பிடப்படுவதுடன் அனுப்புவரின் பெயரும் விலாசமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. எவ்வாறாயினும் கேள்விப்பத்திரக்காரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விரும்பினால் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை அவற்றைப் பெறுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஆயுள்வேத திணைக்களத்தின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அவர் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சிப்பத்திரம் வழங்குவார். குறிப்பிட்ட முடிவுத் திகதியன்று முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது.

5. கேள்விப்பத்திரக்காரர் கேள்விப்பத்திரங்களை திறப்பதற்காகக் குறிப்பிட்ட திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் முதல் பந்தியில் குறிப்பிட்ட விலாசத்தில் பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விப்பத்திரகாரரின் பெயரும் கேள்வித் தொகையும் கேள்விக்காரர்களின் முன்னிலையில் வாசிக்கப்படும். எந்த கேள்விப்பத்திரகாரரும் ஒரு கேள்விப்பத்திரத்தை மறு பரிசீலனை செய்ய விரும்பினால் ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் பிரதியினை ஆயுள்வேத ஆணையாளரின் உத்தரவின்படி மறு பரிசீலனை செய்யலாம்.

6. எல்லா அளிப்புகளும் குறிப்பிட்ட முடிவு திகதியிலிருந்து ஒரு மாத காலம்வரை பெற்றுக் கொள்வதற்கு திறந்து வைக்கப்படும்.

7. தேவைப்படும் எல்லாவகையான மூலிகைகளையும் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்/கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தில் தனக்கு/தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மொத்தத் தொகையின் 5% தைப் பிணைப்பணமாகச் செலுத்தி ஆயுள்வேத ஆணையாளருடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வர வேண்டும்.

9. இது சம்பந்தமாக மேலதிக விவரங்களை ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேத திணைக்களம், 325, கொட்டா ரோட், கொழும்பு 8 ல் பெற்றுக் கொள்ளலாம்.

டபிள்யு. பி. வவேகம,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8,
28.11.1973.

12–172—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

15-20 தொன் திறன் கொண்ட புதிய நிறுக்கும் பாலம் (வேபிறிஜ்) வழங்கல்

கையிருப்பிலிருந்து அல்லது இறக்குமதிசெய்து வழங்கல்

மேற்கூறியவற்றை வழங்கிக்கொள்வதற்கான பொறிமிட்ட கூறுவிலைகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கூறுவிலைகள், 1973 டிசம்பர் 20 ஆந் தேதியன்று காலை 10.00 மணிக்கு முன்னதாகக் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் போடப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அவருக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "புதிய நிறுக்கும் பாலம் வழங்குவதற்கான கூறுவிலை" என்று குறிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

கூறுவிலையுடன் இது சம்பந்தமான விவரத்துண்டுப் பிரசுரத்தையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.

113, காலி வீதி, கொழும்பு.

2-119—07.12.73 ந் திகதிய வர்த்தமானி 89

---

தொடர் இல. : சீடி/45/72

### சௌக்கிய சேவைத் திணைக்களம்—கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள்

சமையலறைக் கழிவுப் பொருட்கள் விற்பனை—கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள்

1.1.74 தொடக்கம் 31.12.74 வரையிலான நிதியாண்டில் கீழ்க் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வைத்திய நிலையங்களிலிருந்து சமையலறைக் கழிவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் அவற்றை அப்புறப்படுத்துவதற்குமான சீல் வைக்கப்பட்ட தனித்தனிக் கேள்விகள் இலங்கைப் பிரசைகளிடமிருந்தும் இலங்கையர் வணிக ஸ்தாபனங்களிடமிருந்தும் றெஜென்ற் வீதியிலுள்ள கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகளின் அத்தியட்சகரால் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு வைத்திய நிலையம் (பகுதி) சார்பாகவும் வெவ்வேறு கேள்விகள், மாதாந்த விகிதங்கள் குறிக்கப்பட்டு இரட்டைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விகள் எனக்கு விலாசமிடப்பட்ட தபால் உறையினுள் வைக்கப்பட்டு அவற்றின் இடது பக்க மேல் மூலையில் "சமையலறைக் கழிவுப் பொருள் விற்பனை" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்வி வைக்கப்பட்ட, சீல் வைக்கப்பட்ட தபால் உறைகள் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆந் திகதி காலை 10 மணிக்கு எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலமோ அன்றி எனது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள்ளோ போடப்படல் வேண்டும்.

3. எல்லாக் கேள்விகளும் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ந் திகதி காலை 10 மணிக்கு எனது அலுவலகத்திற் திறக்கப்படும்.

4. கேள்விகளை அனுப்பிய எல்லாக் கேள்விக்காரரும் அவை திறக்கப்படுகையில் பிரசன்னமாயிருக்கலாம். பிரசன்னமாயிருப்பவர்களின் தகவலுக்காகக் கேள்விக்காரர்களின் பெயர்களும் வீதங்களும் வாசித்துக் காட்டப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் விகிதத்தில் பிணைப்பணத்தைச் செலுத்திக் குறிப்பிட்ட சேவையைச் சரியாகச் செய்து முடிப்பதற்கு ஒப்பந்தம் ஒன்றிற் கைச்சாத்திடுமாறு வேண்டப்படுவர். சேவை சரியாகச் செய்து முடித்ததன் பின்னர் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. கழிவுப் பொருள்களுக்கான பணம் ஒவ்வொரு மாதத்தின் முதல் வேலை நாளிலும் நண்பகல் 12 மணிக்கு முன்பாகவோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

7. கொழும்பு பெரியாஸ்பத்திரியின் கழிவுப் பொருள் மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(1) சமையலறைகளின் கழிவுப் பொருட்கள்.

(2) பெரியாஸ்பத்திரியிலுள்ள எல்லா வாட்டுகளிலும் உள்ள கழிவுப் பொருட்களும் எஞ்சிய உணவுகளும்.

(3) கொழும்பு மருத்துவ தாதிமார் பயிற்சிக் கல்லூரியிலுள்ள சமையலறைக் கழிவுப் பொருட்கள்.

8. தேவைப்படும் மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ஜி. டி பெர்ணாந்து,
அத்தியட்சகர்,
கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள்.

கொ. தொ. வை. அத்தியாட்சகரின் அலுவலகம்,
பெரியாஸ்பத்திரி,
கொழும்பு,
1973.11.23.

அட்டவணை

| வைத்திய நிலையத்தின் பெயர் | கட்டப்பட வேண்டிய பிணைப்பணம் ரூ. ச. |
|---|---|
| 1. காசல் வீதி பெண்கள் வைத்தியசாலை, கொழும்பு ... | 50 0 |
| 2. டி. சொய்சா பெண்கள் வைத்தியசாலை, கொழும்பு ... | 50 0 |
| 3. றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு | 50 0 |
| 4. கண் வைத்தியசாலை, கொழும்பு ... | ...50 0 |
| 5. புற்றுநோய் வைத்தியசாலை, மகரகம | ...50 0 |
| 6. பெரியாஸ்பத்திரி, கொழும்பு— | |
| (i) சமயலறைக் கழிவுப்பொருட்கள் | ... 100 0 |
| (ii) வாட்டுகளிலுள்ள கழிவுப் பொருட்களும் எஞ்சிய உணவுகளும் ... | ... 100 0 |
| (iii) தாதிகள் பயிற்சிக் கல்லூரியிலுள்ள சமையலறைக்கழிவுப் பொருட்கள் | ... 50 0 |
| 7. புனருத்தாரண வைத்தியசாலை, ருகம | ... 50 0 |
| 8. கொழும்பு தெற்கு வைத்தியசாலை கலுபோவில, தெகிவலை ... | ... 50 0 |

12-160—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

## சிறைச்சாலைத் திணைக்களம்

1974 ஆம் ஆண்டிற்கு, கொழும்பு (வெலிக்கடை, கொழும்பு விளக்க மறியற்சாலை, புதிய மகசீன்), மகறை, வத்துப்பிட்டிவல, ஆகிய சிறைச்சாலைகளுக்கு செத்தல் மிளகாய் விநியோகித்தல்

மேற்கூறிய சிறைச்சாலைகளுக்கு 1974.1.1 ல் இருந்து 1974.12.31வரை செத்தல் மிளகாய் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரகாரர் நல்ல ரக செத்தல் மிளகாயைச் சிறைச்சாலைக்கு விநியோகிக்கக்கூடிய விலைகளை கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட வேண்டும். ருத்துக்குரிய விலைகளைக் குறிப்பிட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்களைக் கொழும்பு 9 இல் இருக்கும் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை ஆணையாளரால் விநியோகிக்கப்படும் பத்திரத்திலேயே இருக்க வேண்டும். அப்படி இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு சிறைச்சாலைகளுக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்தினம் மாலை 2.00 மணி வரையிலும் கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஒரே உறையில் வைத்து, தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விரும்பினால் கேள்விப்பத்திரகாரர் அல்லது அவருடைய பிரதிநிதி கேள்விப்பத்திரங்களைச் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் போடலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகளில் இடது கை மேல் பக்கத்தில் " ........ சிறைச்சாலைக்கு செத்தல் மிளகாய் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட்டு, தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9 என்ற முகவரிக்கு கீழே பட்டியலில் குறிப்பிட்ட திகதியன்று காலை 10.30 மணிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரத்திலிருந்து 5 நிமிடத்திற்குப் பின், அதாவது காலை 10.35 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

6. கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த்தழித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இடுதல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு கீழ்ே குறிக்கப்பட்டுள்ள பட்டோலையின் பிரகாரம் முற்பணத்தை சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது கச்சேரிகளிலோ (கொழும்புக் கச்சேரி தவிர) கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற்று அதனைக் காண்பிக்க வேண்டும்.

8. தேர்ந்தெடுக்கப்படும் எந்தக் கேள்விப்பத்திரக்காரரேனும் அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென எழுத்தில் அறிவித்தபின் 10 நாட்களுக்குள் கீழே குறிப்பிட்ட பிணைக் கட்டுப்பணத்தைக் கட்டத் தவறினால் அல்லது கட்ட மறுத்தால் அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகை அரசாங்கத்திற்கு இழந்துவிட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு தவறிய ஒப்பந்தகாரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும். மேலும் கேள்விப்பத்திரகாரர் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக கடமைபுரியும் சிறைச்சாலை ஆணையாளருக்கு இலங்கை நாணயமாக ரூபா ஆயிரம் (ரூபா 1,000) தண்டப் பணமாகச் செலுத்த நேரிடும். இப்பணத்தை சட்ட விதிப்படி அறவிடப்படும்.

9. கேள்விப்பத்திரங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, அல்லது ஒரு கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியையோ ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.

10. இதற்கு முன் அரசாங்க ஒப்பந்தத்தைச் செய்யாத ஒரு கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது தன்னுடைய சொத்துக்களின் பெறுமதியை, காணிகள் எந்தெந்த வட்டாரத்திலுள்ளன என்பதைக் குறித்து, மாவட்ட காரியாதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

11. மேற்கொண்ட விபரங்களைச் சிறைச்சாலை ஆணையாளரது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 23 ந் உ.

ஏ. ஏ. டி சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

பட்டோலை

| சிறைச்சாலை | கேள்விப்பத்திர முற்பணம் ரூ. ச. | கேள்விப்பத்திர பிணைப்பணம் ரூ. ச. | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் திறக்கப்படும் திகதியும் |
|---|---|---|---|
| கொழும்புச் சிறைச்சாலைகள் .. .. | 50 0 .. | 1,000 0 | 19.12.1973 |
| மகறை சிறைச்சாலைகள் .. .. | 25 0 .. | 500 0 | 19.12.1973 |
| வத்துப்பிட்டிவெல சிறைச்சாலை .. .. | 25 0 .. | 200 0 | 19.12.1973 |

12-166/1—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

## சிறைச்சாலைத் திணைக்களம்

1974 ம் நிதியாண்டில் கொழும்பு சிறைச்சாலைகள் (வெலிக்கடை, கொழும்பு விளக்கமறியற்சாலை, புதிய மகசீன்) குண்டசாலை சிறைச் சாலைகளுக்கு இறைச்சி விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் இலங் கையரிடமிருந்து (இலங்கையர் என்பவர் வம்சாவழியாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாய் இருப்பவராகும்). மேற்கூறிய சிறைச்சாலைகளுக்கு 01.01.74 ல் இருந்து 31.12.74 வரைக்கும் இறைச்சி விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரகாரர்கள் தமது மேற்கோள்களில் உணவுகள் எனக் காட்டாது பொருள்கள் என்றே காட்டும்படி வேண்டப்படுகின்றனர். தாம் கேள்விப்பத்திரங்களை இணைப்பதற்கு விரும்பும் விடயங்களை அது தொடர்பான பட்டோலை அல்லது பட்டோலைகளில் மேற்கோள் காட்ட வேண்டும். அவர்கள் பட்டோலைகள் ஜி. பி. என்பனவற்றில் ஏதாவது ஒன்றையோ அல்லது கூடுதலாகவோ மேற்கோள் காட்டலாம். ஒவ்வொரு படடோலையின் மட்டிலும் தனித்தனிப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வது கேள்விப்பத்திர சபையின் விருப்பத்திற்குள்ளானதாகும். வழங்கப்பட வேண்டிய பொருள்கள் பின்வரும் பட்டோலைகளின் கீழ் வகுக்கப் பட்டுள்ளது.

**பட்டியல் " பி "**

மாட்டிறைச்சி
ஆட்டிறைச்சி
ஈரல்
கோழிக்குஞ்சு
முட்டை

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஒரே உறையில் வைத்து, " தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9" என்று முகவரியிட்டிருத்தல் வேண்டும். ஒரு விண்ணப்பப் பத்திரத்தில் ஒரு பட்டியலுக்குரிய விலை வீதம் மட்டுமே பொருளடக்கம் செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண் டும்; அல்லது கேள்விப்பத்திரகாரர் அல்லது அவருடைய பிரதிநிதி நேர்முகமாகச் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை அதிகாரி, ஜே. பி. டெல்கொடை அவர்களிடம் நேரில் கையளித்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெறுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகளில் இடதுகை மேல் பக்கத்தில் " .......... சிறைச்சாலை .... பட்டியலில் உள்ள உணவுப் பொருட்கள் விநியோகம் " என்று குறிப்பிட்டுத் தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9 என்ற முகவரிக்கு 9 ஆம் பந்தியில் குறிப்பிட்ட திகதியன்று காலை 10.30 மணிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரத்திலிருந்து 5 நிமிடங்களுக்குப் பின் அதாவது காலை 10.35 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும், கேள்விப் பத்திரகாரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்க லாம்.

6. கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 9 இல் இருக்கும் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை ஆணையாளரால் விநியோ கிக்கப்படும் பத்திரத்திலேயே இருக்க வேண்டும். அப்படி இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 9 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையங்களுக்குரிய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன் தினம் மாலை 2.00 மணி வரையிலுமே கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

7. கேள்விப் பத்திரங்களில் கொடுக்கும் வீதங்களை முடிவுத் திகதி யிலிருந்து மூன்று மாதங்களுக்குத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்பதை கேள்விப்பத்திரகாரர் கவனித்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த் தழித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இருத்தல் வேண்டும்.

